# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, DHARMAPURI

## E.A. No.16 of 2020 in EP. No. 42 of 2018

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 (RW1):**திரு.பாலசுப்ரமணியன்

**Date:**12.06.2023.

**குறுக்கு விசாரணை (மனுதாரர்கள் தரப்பில்):**

8ம் எதிர்மனுதாரர் கூட்டு நிறுவனத்தில் எத்தனை நபர்கள் பங்குதாரர்கள் என்றால் 5 நபர்கள் பங்குதாரர்கள். மனுதாரர்கள் பூங்கொடி மற்றும் கலைமதி ஆகிய இருவரும் 8ம் எதிர்மனுதாரர் கூட்டு நிறுவனத்தில் பங்குதாரர்களா என்றால் இல்லை. என்னிடம் கடன் கேட்டவர்கள் யார் என்றால் 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் கடன் கேட்டார்கள். இந்த மனுதாரர்கள் இருவரும் என்னிடம் கடன் கேட்டார்களா என்றால் இல்லை. எதனடிப்படையில் கடன் கொடுத்தேன் என்றால் பிராமிசரிநோட்டு மற்றும் கடன் ஒப்பந்தம் ஆவணங்கள் அடிப்படையில் கடன் கொடுத்தேன். 30 ஆண்டுகளாக 3 முதல் 7 எதிர்மனுதாரர்களின் குடும்பம் பற்றி எனக்கு தெரியும் என்று எப்படி கூறுகிறேன் என்றால் 3ம் எதிர்மனுதாரரான திருநாவுக்கரசுவும், நானும் ஒன்றாக சட்டக் கல்லூரியில் பயின்றோம், அதனால் கூறுகிறேன். நான் எதிர்மனுதாரர்களுக்காக கடன் தொகையை வங்கியில் எதிர்மனுதாரர்களின் கடனுக்காக கட்டினேனா அல்லது 3 முதல் 7 எதிர்மனுதாரர்களிடம் நேரடியாக கடன் தொகையை செலுத்தினேனா என்றால் 3 முதல் 7 எதிர்மனுதாரர்களிடம் தொகை நேரடியாக கொடுத்தேன். நான் 3 முதல் 7 எதிர்மனுதாரர்களிடம் கடனாக கொடுத்த தொகை எவ்வளவு என்றால் ரூ.58,50,000/- ஆகும். எவ்வளவு தொகை கேட்டு எதிர்மனுதாரர்கள்மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால்

மேற்படி அசல் தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகை சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேன். எந்த சொத்துக்களை விற்று மனுதாரர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எதிர்மனுதாரர்கள் குடும்பத்திற்கு அதிக அளவில் சொத்துக்கள் இருந்தது, அதில் ஒரு சொத்தை விற்று திருமணம் செய்து வைக்கப்பட்டதாக 5ம் எதிர்மனுதாரர் திருநாவுக்கரசு என்னிடம் கூறினார். நான் சொல்வதுபோல எந்த சொத்தையும் விற்று மனுதாரர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் குடும்பத்தில் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையில் பாகப்பிரிவினை ஏதாவது ஏற்பட்டதா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது, ஆனால் பெண் கூட்டு குடும்ப உறுப்பினர்களுக்கு சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைக்கப்பட்டதால் ஆண் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் சொத்துக்களை எடுத்துக் கொண்டதாக 5ம் எதிர்மனுதாரர் என்னிடம் கூறினார். நான் சொல்வதுபோல பெண் வாரிசுகளுக்கு சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைக்கப்பட்டதால் அவர்களுக்கு கூட்டுக் குடும்ப சொத்தில் பாகம் கிடையாது என்பது தவறு என்றால் சரியல்ல. அசல் வழக்கில் 3 முதல் 8 எதிர்மனுதாரர்களும் எதிருரை தாக்கல் செய்து வழக்கை நடத்தினார்களா என்றால் இல்லை, 3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகி சமாதான மனு தாக்கல் செய்து வழக்கை ஒப்புக்கொண்டு சமாதான தீர்ப்பு வழங்கப்பட்டது. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்த வகையில் தெரியும் என்றால் அவர் என் குடும்ப நண்பர் மற்றும் என் வழக்கறிஞர் அலுவலகத்தில் பணிபுரிபவர். அவர் வழக்கறிஞரா என்றால் வழக்கறிஞர் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டார். வழக்கு தொகையில் 2ம்

எதிர்மனுதாரரின் பங்கு தொகை எவ்வளவு என்றால் ரூ.28,50,000/– ஆகும். 5ம் எதிர்மனுதாரரும் நானும் நண்பர்கள் என்பதால் நாங்கள் கூட்டு சேர்ந்து கூட்டு குடும்ப சொத்துக்களை அபகரித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் வழக்கை சுமூகமாக எங்களுக்குள் முடித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு நகலை இந்த மனுதாரர்களுக்கும் அனுப்பினேனா என்றால் அவர்களுக்கு சம்மந்தம் இல்லை என்பதால் அனுப்பவில்லை. இந்த மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தேனா என்றால் அவர்களுக்கு சம்மந்தம் இல்லை என்பதால் சேர்க்கவில்லை. நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தின் மதிப்பு தெரியுமா என்றால் சுமார் ரூ.1,50,00,000/– மதிப்பு பெறும் என்று எனக்கு தெரியும். நான் சொல்வது தவறு என்றும் அந்த சொத்தின் மதிப்பு பல கோடி ரூபாய் பெறும் என்றும் அந்த சொத்தை அபகரிக்க மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. பெண்கள் திருமணமாகி போயிருந்தாலும் கூட்டு குடும்ப சொத்தில் பெண் வாரிசுகளுக்கு பங்குரிமை உள்ளது என்றும் இந்த மனுதாரர்களுக்கு மனு சொத்துக்களிலுள்ள பங்குரிமையை அபகரிக்கும் எண்ணத்தில் நானும் 5ம் எதிர்மனுதாரரும் கூட்டு சேர்ந்து மனு தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. நிறைவேற்று மனுவில் கூறப்பட்டுள்ள சொத்து பாகப்பிரிவினை ஆகாத கூட்டு குடும்ப சொத்து என்றும் அந்த சொத்தினை வழக்கு தொகைக்காக முழுவதுமாக பற்றுகை செய்திருப்பது சட்டப்படி தவறு என்றும் மனுதாரர்களுக்கு மனு சொத்தில் உள்ள பங்குரிமையை மேற்படி அசல் வழக்கு தீர்ப்பினால் கட்டுப்படுத்த முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர்களுக்கு அவர்கள் பங்கரிமையை பெற தனியாக பாக வழக்கு தாக்கல் செய்ய

உரிமை உள்ளது என்றும் பாக வழக்கு மூலம் கூட்டு குடும்ப சொத்துக்களில் மனுதாரர்களின் பாகம் தீர்மானிக்கும் வரையில் மனு சொத்து முழுவதையும் பற்றுகை செய்து தாவா தொகைக்காக ஏலத்திற்கு கொண்டுவர எனக்கு உரிமை இல்லை என்றும் மனுதாரர்களின் பங்குரிமை போக மீதி சொத்தின் மீதுதான் நான் வழக்கு தொகை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் சொன்னால் சரியல்ல. ஆகவே நானும் 5ம் எதிர்மனுதாரரும் கூட்டு சேர்ந்து மோசடியாக கூட்டு குடும்ப சொத்துக்களை அபகரிக்கும் எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**(3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜரில்லை, அவர்கள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜராகவில்லை, எனவே 3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை ஏதும் இல்லை என பதிவு செய்யப்படுகிறது.)**

Sd/–A.Manimozhi,

Principal District Judge,

Dharmapuri.